DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW 9 |
| Name | : | திரு. இரவிக்குமார் |
| Father's Name | : | மாது |
| Village | : | மொரப்பூர் |
| Taluk | : | அரூர் |
| District | : | தருமபுரி |
| Profession | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 57 வயது |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 21st day of May 2026.
எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் முதல் விசாரணை தொடர்ச்சி :-</u>

இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்திய இருசக்கர வாகனம் TN 24 X 2116 TVS Victor சிவப்பு நிறம் கொண்ட **வாகனத்தின் புகைப்படம் அ.சா.பொ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பாரதிமோகன் அன்றைய தினத்தில் எந்த அலுவலில் இருந்தார் என்ற விவரத்தை குறிப்பிடும் **பொது நாட்குறிப்பு மற்றும் மாதிரி அலுவல் புத்தகத்தின் நகல் (True Copy) அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாகனத்தின் புகைப்படும் எப்போது எடுக்கப்பட்டது என்றால் 2ம் எதிரி கார்த்திகேயன் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்தபோது புகைப்படம் எடுக்கப்பட்டது. குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தபோது புகைப்படம் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்வதற்கு என்ன காரணம் என்றால் அப்போதே

தாக்கல் செய்துவிட்டேன். ஒப்புதல் வாக்குமூலம் பெறும் போது வாகனத்தை கைப்பற்றி இருந்தால் குற்ற எண், வழக்கு எண் குறிப்பிட்டு இருக்காது என்றாலும், தற்போது தான் புகைப்படம் எதிரிகளின் மீது வழக்கை நிரூபிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் போது தாக்கல் செய்யப்பட்ட புகைப்படம் வைத்துள்ளேனா என்றால் நீதிமன்றத்திலும் உள்ளது, எங்கள் கைகோப்பிலும் உள்ளது. அப்போது வழக்கு எண்ணோ, குற்ற எண்ணோ இல்லை என்றால் பின்னால் எழுதி இருக்கலாம். மாதிரி அலுவலக பதிவேடு ஒரே பக்கம் கொண்டது தான். இரண்டு பக்கம் கொண்ட அலுவல் பதிவேடு என்றால் இருக்கலாம். ஒரு பக்கம் ஆஜர், மறுபக்கம் ஆஜரில்லை இதர அலுவல் எழுதுவார்கள். பதிவேடு Full Size என்றால் சரிதான். மாதிரி நகல் ( Xerox) ஒரே பக்கத்தில் காட்டுவதற்காக அவ்வாறு எடுத்துள்ளார்கள். மேலும், கீழும் Adjust செய்து எடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். பொது நாட்குறிப்பில் Long Size Note என்றால் சரிதான். A4 Sheet ல் கவராகாததால் சுருக்கி எடுத்துள்ளார்கள். பொது நாட்குறிப்பில் G.D Number வரும் என்றால் ஆமாம். அது 2021 ஆண்டிற்கு மேல் தான் வரும், அப்போது இல்லை. G.D number மறைத்து எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எழுதாத பேப்பரில் எழுதி G.D number யை மறைத்து Xerox எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல G.D. number எங்கள் அலுவலக கோப்பில் உள்ளது. G.D.No.2534261 , G.D.No.2534262 ஆகும். வாதி எதிரிகள் மீது எந்த குற்றமும் சொல்லவில்லை என்றாலும், தற்சமயம் நாங்கள் தான் பொய்யான ஆவணங்களை தாயாரித்து எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி பாரதிதாசன் எனக்கு கீழ் பணி செய்வதாலும், எனக்கு அடிபணிந்து நடக்காததால் அவர் மீது பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் அவர் வேறொரு காவல் நிலையத்தில் தான் பணியிலிருந்தார். 1ம் எதிரியின் மீது வழக்கு போட்டால் வழக்கு நிலைக்காது என்பதால் அவரது உறவினரான 2ம் எதிரியையும் சேர்த்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.